***17/05/2026 - 60*வது உலக தகவல் சமூகத்தொடர்பு ஞாயிறுக்கான விசுவாசிகளின் மன்றாட்டுகள்**

இந்த 60வது உலக தகவல் சமூகத்தொடர்பு ஞாயிற்றுக்கிழமையில் - மானிடக் குரல்களையும் முகங்களையும் பேணிக்காத்தல் — நமது உலக தகவல் தொடர்பின் வழிமுறைகளும் — ஒற்றுமையின் பணிக்காக பயன்பட வேண்டும் என்று நமது திருஅவை நம்மை அழைக்கிறது.

இயேசு தமது சீடர்கள் ஒருமைப்பாட்டில் நிலைத்திருக்க வேண்டுமெனப் செபித்தது போல, நாமும் நமது வார்த்தைகள், புகைப் படங்கள் மற்றும் மின்னணுக் கருவிப் பயன்பாடு/டிஜிட்டல் *(Digital)* இறைவனின் உண்மையையும் கண்ணியத்தையும் பிரதிபலிக்க வேண்டும் என்கின்ற பொறுப்பை ஏற்றுள்ளோம்.

அனைத்து வேளைகளிலும் நமது உலக தகவல் சமூகத்தொடர்பு இறைவனை மகிமைப்படுத்தவும், ஒற்றுமையில் வளரவும் நமது செபங்களை இறைவனின் முன்னிலையில் கொண்டு வருவோம்;

1. டிஜிட்டல் யுகத்தில் நமது திருஅவை ஒளிவிளக்காய் திகழவும், நமது தகவல்தொடர்புகள் அனைத்தும் மனிதர்களுக்கு இரக்கம், நீதி, மரியாதையை வழங்கவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. திருத்தந்தை லியோ XIV மற்றும் திருஅவைத் பொறுப்பாளர்கள் அனைவரும், டிஜிட்டல் உலகில் மனித மாண்பையும் உண்மையையும் பாதுகாத்து, நம்பிக்கையாளர்களைச் செம்மையாய் வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நாட்டுத் தலைவர்கள் அனைவரும் தகவல் தொடர்பின் ஆற்றலை உணர்ந்து, தொழில்நுட்பம் மனிதகுலத்தைச் சிதைக்காமல், அமைதி மற்றும் நீதிக்கான கருவியாகச் சேவை செய்வதை உறுதிசெய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. ஊடகத் துறையில் பணியாற்றுவோர் கிறிஸ்துவின் உண்மையைப் பறைசாற்றவும், தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்தாமல், அமைதி மற்றும் புரிந்துணர்வை வளர்க்கும் கருவியாகத் தங்கள் திறமைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. குடும்பங்கள், இளைஞர்கள் மற்றும் புறக்கணிக்கப்பட்டோர் அனைவரும் மின்னணு (டிஜிட்டல்) ஊடகங்களை நேர்மையுடன் பயன்படுத்தி, தங்கள் மாண்பினை நிலைநாட்டவும், ஒவ்வொரு குரலும் இறைவனின் உருவமாக மதிக்கப்படவும் இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.

6. கிறிஸ்துவின் செபத்தில் ஒன்றுபட்ட நமது பங்குச் சமூகத்தினர், தகவல் தொடர்பு வழிகளை ஒற்றுமை, நம்பிக்கை, அன்பின்

பாலங்களாக மாற்றி, கிறிஸ்துவின் பிரசன்னத்தை உலகிற்கு வெளிப்படுத்திட இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.

அன்புத் தந்தையே, எங்கள் செபங்களைக் கனிவுடன் கேட்டருளும். நாங்கள் ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்து கொண்டு, உமது அன்பில் நிலைத்திருக்க அருள் புரியும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக உம்மிடம் மன்றாடுகிறோம்.